# செம்மண்

நிலம் 3 துகள் 138 வள்ளுவர் ஆண்டு 2052, 11 - 17 பங்குனி 2023 வாரமலர் பக்கங்கள் 15



# மாநகரசபையைக் கைநழுவ விட்ட தமிழர்...!




**நியூட்டன்**

தனியொரு மனிதனுக்கு எவ்வளவு திறமையிருந்தாலும் அவனது குடும்பமும் அவன் வாழும் சூழலும் அவனுக்கு உரியவாறு ஒத்துழைக்காவிட்டால் அவனால் வாழ் நாளில் எதையும் சாதித்து விட முடியாது. அதுபோன்றதொரு நிலையே யாழ் மாநகரசபைக்கும் ஏற்பட்டிருக்கிறது. 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணசபை நிர்வாகமானது மூத்த தமிழ் நீதியரசர் ஒருவரின் தலைமையில் சிறப்பாகச் செயற்பட முடியாமல் திண்டாடிக் காலம் கடத்தியிருந்தது. தற்போது மாநகரசபையைக்கூடத் தமிழ்த் தலைவர்களால் நடத்த முடியாத நிலைக்கு நிலமை வந்தடைந்திருக்கிறது. இனி உருவாகப்போகும் உள்ளூராட்சி மன்றங்களின் நிலையும் அவ்வாறே அமைய வாய்ப்புண்டு. மாகாணசபை, மாநகரசபை, உள்ளூராட்சி மன்றங்கள் என எங்குமே தமிழரால் ஒற்றுமையாகச் செயற்பட முடியாத நிலையில் அனைத்தும் கைநழுவிப்போகும் நிலை எட்டிப்பார்க்கத் தொடங்கியிருக்கிறது. யாழ்ப்பாண மாநகரசபையானது அரசின் சிறப்பு ஆணையாளரின் கைக்கு மாறப்போகும் கட்டியங்கள் தெரிகின்றன.

தமிழர்கள் வேறு தலைமைகளுக்கும் நபர்களுக்கும் கீழ்ப்பணிந்து பணியாற்றும் பண்பு நிறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆனால், தாமே தலைமை தாங்கி நிர்வாகம் நடத்தும் ஆற்றல் அவர்களிடம் இல்லை. தமிழரின் அரசியல் என்பது சாதி ரீதியானதும், சிங்களவரைக் குறை கூறி தாங்கள் எதுவும் செய்யாமலே இருப்பதும் என்றாகிவிட்டது.

தற்போது யாழ் மாநகரசபையில் தமிழர் மட்டுமே உறுப்பினர்களாக உள்ளனர். சிங்களவரோ முஸ்லிம்களோ அங்கில்லை. அத்தகைய சூழலில் மக்களுக்கான வேலைகளை




மிகவும் கச்சிதமாக நகர்த்த முடியும். ஆனால் நாய்க்கு நடுக்கடல் போனாலும் நக்குத் தண்ணியே என்ற பழமொழிக்கு இணங்கவே யாழ் மாநகர சபை இயங்கிக் கொண்டிருக்கிறது.

**ஏன் பாதீடு அவசியம்**

பாதீடு என்பது ஏதாவதொரு திட்டத்தை நிறைவேற்றும் நோக்குடன் ஒதுக்கப்படுகின்ற நிதியறிக்கை ஆகும். நாடாளுமன்ற நிதி அறிக்கையில்கூட குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. அவற்றை விவாதித்துச் சீர் செய்வதே நாடாளுமன்ற நடைமுறையாகும். அத்தகைய ஓர் அணுகுமுறையிலேயே மக்கள் பிரதிநிதிகளாக மாநகரசபையில் அங்கம் வகிப்பவர்களும் செயற்படவேண்டும். மாறாகப் பாதீடு என்பது மாநகரசபை உறுப்பினர்களுக்கோ கட்சிகளுக்கோ சொந்தமானது அல்ல. அது மக்களின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டது. மக்களின் நிதி மாநகரசபைக்குச் செலுத்தப்பட்டு வருகிறது. அந்த நிதியையும் அரச நிதியையும் தனியார் அன்பளிப்பு நிதிகளையும் ஒருங்கிணைத்து மக்களுக்குப் பணியாற்றுவதே மாநகர சபை நிர்வாகத்தின் கடப்பாடாகும். ஓர் அபிவிருத்தித் திட்டத்தைப் பொறுப்பற்ற ஒப்பந்தகாரர் ஒருவர் பொறுப்பெடுத்தால் எவ்வாறு உரிய நேரத்தில் அந்த வேலைகளை முடிக்க மாட்டாரோ..., கால தாமதத்தை ஏற்படுத்துவாரோ...., அதையே மாநகரசபையிலும் செய்கிறார்கள். இந்த ஆளுமைக் குறைபாட்டால் காலம் இழுத்தடிக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட நிதி போதாமல் போக வாய்ப்பேற்படுகிறது. நாணயத்தின் பெறுமதியில் ஏற்படும் சரிவு பொருள் விலையேற்றம் தேவைகளில் ஏற்படும் மாற்றங்கள் எனக் குறிப்பிட்ட வேலையைச் சரிவரச செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. இந்த நிலையில் முன்னெடுக்கும் திட்டங்களை இழுத்தடித்து அரைகுறையாகப் பூசித் தப்பி மெழுகி முடிக்கும் நிலையே வடக்குக் கிழக்கில் பெரும்பாலும் காணப்படுகிறது. இதற்குக் காரணம் அரசியல்வாதிகளிடமுள்ள புடுங்குப்பாடு, பங்குப் பணம் பிரிக்கும் நிலை, லஞ்சம் ஊழல் போன்றனவே.

யாழ் மாநகரசபையில் நிலவும் பிடுங்குப்பாடு இழுபறி நிலை காரணமாக உரிய நிதி மக்களுக்குப் பயன்படாது திரும்பிச் செல்லவே வழி ஏற்படுகிறது. சிங்கள ஆட்சியாளர்கள் நினைப்பதைவிட மிக அதிகமாகவே தமிழ்ப் பிரதிநிதிகள் சிங்கள ஆட்சியாளர்களுக்குச் சாதகமாகச் செய்து காட்டுகின்றனர். இந்தத் திறமையின்மையை மறைப்பதற்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் அதிகம் படித்தவர்கள், மண்டைக் காய்கள், கந்தபுராணக் கலாசாரத்துக்கு உரியவர்கள் என்றெல்லாம் 23புலி படத்தில் வடிவேலு சொல்வதுபோல பலவற்றை எடுத்து விடுகிறார்கள்.

**மக்கள் தீர்ப்பு**


இனி நடக்கவிருக்கும் யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் தற்போது பதவியிலிருக்கும் எவரையும் மக்கள் தெரிவு செய்யாது விடுவதே நல்லது. அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களை மீண்டும் வெல்ல வைப்பது என்பது தமது தலையில் தாமே மண் அள்ளிப் போடுவதற்கு ஒப்பானது. அதே கட்சிகளைச் சேர்ந்த புதியவர்களையும் நிதானமாக முடிவெடுப்பவர்களைத் தெரிவு செய்வதன் மூலம் தற்போதுள்ள சூழலை மீள நிகழாமல் செய்ய முடியும். தெரிவு செய்யப்பட்ட பரிதநிதிகள் பொறுப்பாக நடந்து கொள்ளாதவிடத்து அவர்களைத் துரத்த வேண்டிய ஜனநாயகக் கடப்பாடும் வாக்களிக்கும் மக்களின் கைகளில் உள்ளது. திறமையின்மைக்கும் ஒற்றுமையின்மைக்கும் மக்கள் மீதான அக்கறையின்மைக்கு மான உதாரணங்களே இதுவரை யாழ்ப்பாணம் மாநகரசபையில் காணப்படுகின்றன.

**பிரச்சினையைத் தீர்க்கும் ஆற்றலில்லை**

எழுகின்ற பிரச்சினைகளை ஆராய்ந்து அதை ஊதிப் பெருக்கவிடாது ஆரம்பத்திலேயே தீர்ப்பது என்பது தமிழர் மத்தியில் அறவே இல்லாதுள்ளது. மாகாண, உள்ளூராட்சி, பிரதேச சபைகள் என எல்லாமே பட்டிமன்ற அரங்குகளாக மாறியிருக்கின்றன. ஒருவர் கதைப்பதற்கு எதிராக எப்படிக் கதைப்பது என்பதிலேயே மற்றவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். தவிர அந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் ஆற்றல் இந்தத் தலைவர்களிடம் இல்லா திருக்கிறது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாது வெறு யாராவது ஒருவருடைய தலையில் அதை ஏற்றிவிட்டுத் தந்திரமாகத் தப்பிக் கொள்வது என்பதே தமிழர் அரசியலாகிவிட்டது. தொடர்ந்து இழுபறிப் பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் யாழ் மாநகரசபையானது அரசின் சிறப்பு ஆணையாளரின் கைக்கு மாறிவிட்டால் காலப்போக்கில் அதன் நிர்வாகம் முழுவதுமாகத் தமிழர்களிடமிருந்து கைநழுவிப்போக வாய்ப்புண்டு.

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப்பகத்தால் கிளிநொச்சியில் வெளியிடப் பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தியாயத்தைச் செம்மண்ணில் வாசிக்கத் தருகிறோம்.




15

மு.திருநாவுக்கரசு

## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

இராணுவ ரீதியில் வெற்றிகொள்ளப் படமுடியாத பகுதியாகவும், போராட்டத்தின் முதன்நிலை கள தளப்பகுதியாகவும் வன்னி மண் நிலைக்கின்றமை, "ஜயசிக்குறு" இராணுவ நடவடிக்கையின் படுதோல்வி தெற்கில் குறிப்பாகக் கொழும்பில் நடந்தேறிய பாரிய தாக்குதல்கள், பனிப்போர் முடிவுக்கு வந்தமையும் புதிய உலகமயமாக்கத்துக்கான மேற்குலகின் தேவைகளும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் நிதிப் பொருளாதாரத்தின் தேவை, நிதிப் பொருளாதாரத்தை மேற்குலகம் இலங்கை அரசின் மீது ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தும் நிலை உருவாகியமை ஆகிய வற்றின் பின்னணியில் சிங்கள உயர் குழாம் "சமாதானம்" பற்றி ஓரளவு "செயல்பூர்வ" அர்த்தத்தில் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது.

மனிதன் உயிரிழப்புக்களைவிடவும் சொத்திழப்புக்களை அதிகம் நினைவில் வைத்திருப்பான். இது பற்றி மத்திய காலத்துப் பிரபலமான அரசியற் கூற்றொன்று உண்டு. அதாவது தன் தந்தை கொல்லப்பட்டதை மகன் மறந்திடக்கூடும் ஆனால் தன் பூட்டனாரின் சொத்து அழிக்கப்பட்டதை அவன் ஒருபோதும் மறக்க மாட்டான்". சாதாரணமாக யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டதை தமிழ் மக்கள் அதிகம் நினைவுகூர்வதை

**அன்ரன் பாலசிங்கம் சமஷ்டி முறையில் தீர்வு காண்பதற்கான தமது தரப்பின் சம்மதத்தைப் பேச்சுவார்த்தைகளின் ஏற்பாட்டாளர் திரு. விதார்ஹெல்கெசன், மற்றும் இலங்கை அரச தரப்புத் தலைமைப் பேச்சுவார்த்தையாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் என்போர் முன்னிலையில் தெரிவித்தார்**

அவதானிக்கலாம். உயிரிழப்புக்கள் அதிகம் உடனடித் தாக்கத்தைக் கொண்டவை. பொருளாதார ரீதியான இழப்புக்கள் உடனடியான தாக்கத்தையும் நின்று நிலைக்கும் எதிர்காலத் தாக்கத்தையும் விளைவிக்க வல்லவை. மரண பயம் பற்றிய சூடு கால இடைவெளிகளுக்குள் தணியக்கூடிய தாயினும் பொருளாதார ரீதியான நெருக்கடிகள் மனிதனை அதிகம் நிர்ப்பந்திக்க வல்லவை. இலங்கை எதிர்நோக்கும் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளின் பின்னணியில் சர்வதேச நிதியுதவி எனும் ஆயுதம் இலங்கை அரசை, பதவிக்கு வரும் அரசுகளை அரசியல் தீர்மானங்களின்பால் இனப்பிரச்சினைக்கான தீர்வின்பால் அதிகம் உந்தித் தள்ள வல்லதாய் உள்ளது. மனவிருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் சூழலின் நிர்ப்பந்தங்களே தீர்மானங்களை அதிகம் நிர்ப்பந்திக்கின்றன. இவ்வாறாகத் தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கவேண்டும் என்ற விருப்பங்களுக்கு அப்பால் ஏதோ ஒரு வகைச் சமஷ்டி பற்றிப் பேசவேண்டும் என்ற காலகட்ட நிர்ப்பந்தங்களே சிங்கள ஆட்சியாளர்களைப் பேச்சுவார்த்தையின்பால் தள்ளியுள்ளது. இதன் அர்த்தம் அவர்கள் ஓர் அரசியல் தீர்வைக் காண விரும்புகிறார்கள் என்பதல்ல. மாறாக யுத்தத்துக்கு முகம் கொடுத்துச் சூழலைக் கையாளப் புறப்பட்டுள்ளார்கள் என்பதே உண்மை. இத்தகைய கையாளல்களில் அவர்கள் பெறும் வெற்றி தோல்விகள் அளவே வரலாற்றுப் பேறுபேறாகும். இத்தகைய பெறுபேறுகளே அடுத்த கட்ட வரலாற்று இயக்கத்திற்குரிய இருப்பு நிலையாகும்.

இத்தகைய இருப்பு நிலைதான் அடுத்த கட்டத்தை நிர்ணயிக்கிறது. இதுவே வரலாற்றில் இருப்புநிலை நிர்ணயக் கோட்பாடெனெ அழைக்கப்படுகிறது. அதாவது புறநிலையின் மீது மனிதன் வகிக்கத்தக்க வரையறைக்குரிய அவனது பாத்திரத்தையும் மனிதன் மீது புறநிலை வகிக்கக்கூடிய அதனது இயல்பான பாத்திரத்தையும் கூட்டவரும் தொகைதான் இருப்பு நிலையாகும்.

இதில் குறிக்கோள்கள், உள்நோக்கங்கள், விருப்பு வெறுப்புகள், தேர்தல் உத்திகள் அதிகாரப் போட்டிகள் என்பன ஒருபுறமாகவும் யதார்த்தம் இன்னொரு புறமாகவும் அரங்கில் நடைபோடும். அந்த யதார்த்தத்தை நோக்கிய, அந்த யதார்த்தத்தை எதிர்கொள்ளவேண்டிய மேற்படி முதல் தரப்பின் வளைவு, நெளிவு, சுழிவுகளைத்தான் நாம் இங்கு சமாதானம் தீர்வு என்ற பதங்களுக்குள்ளால் புரிந்துகொள்ள வேண்டியதாய் உள்ளது.

இத்தகைய பின்னணியில் அகச் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான சமஷ்டி முறைத் தீர்விற்கான சமரச முயற்சிகளில் ஈடுபடுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் கோரப்பட்டனர் எனத் தெரிகிறது. இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒஸ்லோவில் இடம்பெற்ற முதலாம் சுற்று, மூன்றாம் சுற்று அமர்வுப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் (2002ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை) பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிடப்பட்ட மாநாட்டின் உத்தியோகபூர்வ அறிக்கையில் விடுதலைப் புலிகள் தரப்பு தலைமைப் பேச்சுவார்த்தையாளர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சமஷ்டி முறையில் தீர்வு காண்பதற்கான தமது தரப்பின் சம்மதத்தைப் பேச்சுவார்த்தைகளின் ஏற்பாட்டாளர் திரு.விதார்ஹெல்கெசன், மற்றும் இலங்கை அரச தரப்புத் தலைமைப் பேச்சுவார்த்தையாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் என்போர் முன்னிலையில் தெரிவித்தார். இது ஒரு பத்திரிகையாளர் மாநாட்டு அறிக்கையாய் அமைந்ததே தவிர கையெழுத்திடப்பட்ட ஒரு பிரகடனமாயல்ல என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

மேலும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருந்த திரிவுபடுத்தப்பட்ட செய்தியொன்றைத் திருத்தம் முகமாகவும், சமஷ்டி முறையிலான தீர்வில் இயக்கத்துக்கு இருக்கும் ஈடுபாட்டைத் தெளிவுபடுத்தவும் முற்பட்டார். இத்தகைய சமஷ்டி முறையிலான இருதரப்பு நிலைப்பாடுகளின் அடிப்படையில் பின்பு இலங்கை அரசாங்கம் இடைக்கால ஆட்சி முறைக்கான ஓர் உத்தேச வரைபை முன்வைத்தது. விடுதலைப் புலிகளும் அது தொடர்பான தமது உத்தேச வரைபுத் திட்டம் ஒன்றை முன்வைத்தனர். இவ்வாறாக இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு சமஷ்டி முறையில் காணப்படவேண்டும் என்ற ஓர் அரசியல் நிலை சர்வதேச பரிமாணத்துடன் தோன்றியது.



(தொடரும்)

தர்மராசா

# சிறைக்குள்...

99

## பாண் வாங்குவதற்கு ஓட்டமாய் ஓடும் கைதிகள்



**1.6.2002**அன்று அனுராதபுரச் சிறையில் காலையில் கதவு திறந்தது. கதவு திறந்தவுடன் கைதிகள் அனைவரும் அங்கிருந்த அரச மரத்தை நோக்கி ஓடினார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து ஓடினேன். அரச மரத்தின் கீழ் ஒரு சிறிய புத்தர் கோவில் இருந்தது. அந்தக் கோவிலையும் அரச மரத்தையும் சுற்றி வந்தேன். அங்கிருந்த பெரிய பாத்திரம் ஒன்றுக்குள் பாண் துண்டுகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றை எடுத்துக் கொண்டு மறுபடியும் ஓடிச் சென்று இடையில் சம்பல் வைத்திருப்பவரிடம் சம்பல் வாங்க வேண்டும். சங்கத்தில் ஒருவர் கோப்பை கொண்டு வருவார். சங்கத்தில் 5பேர் இருந்தால் 5பேரும் அருகில் நின்றால்தான் சம்பல் போடுவார்கள். இல்லாதவர்களுக்குச் சம்பல் கிIடைக்காது. பின்னர் நேராகச் சிறைக் கூட்டுக்குள் ஓடிப் போய்விட வேண்டும். இந்த அவசரத்துக்குள்ளும் அங்கு நீண்ட காலம் சிறையிலிருக்கும் தமிழ்க் கைதிகள் சிலர் பூப்பிடுங்கவும், ஏனைய வாட்களில் உள்ள கைதிகளுடன் கதைக்கவும் நேரத்தை ஒதுக்குவது விநோதமாக இருந்தது. குறுகிய நேரத்துக்குள் பாண் மற்றும் சம்பலைப் பெற்றுவிடவேண்டியிருப்பதால் வேகமாக ஓடுவதன்மூலம் அதைச் செய்து முடிக்கின்றனர்.

ஒரு நாள் அரசியல் கைதி ஒருவர் இரண்டு பாண் துண்டுகளை எடுத்துள்ளார். அதைச் சிறை ஊழியர்கள் கண்டுவிட்டார்களாம். அவருக்குக் குண்டான் தடியால் கடுமையாக அடித்தார்கள். போதாக்குறைக்குச் சிறை வரை முட்டுக்காலில் நடக்கவிட்டார்கள். இந்தப் பாணுக்கு ஓடுவதும் சம்பல் வாங்குவதும் பாடசாலைகளில் நடக்கும் தடை தாண்டல் ஓட்டத்தை ஷஞாபகப்படுத்தும். இவ்வாறு ஒவ்வொரு சிறையிலும் ஒவ்வொரு புதினம் இருக்கும்.

அனுராதபுரச் சிறையின் ஈ-2 வாட்டின் சுவர்கள், பாய்களில் எல்லாம் சீலைப் பேன், புறாப் பேன் போன்றன அதிகம் இருந்தது. இரவில் படுக்க முடியாத அளவுக்கு உடல் முழுதும் ஊர்ந்து திரியும். கண்டபடி கடிக்கும். அதுபற்றி ஒரு கைதியிடம் கேட்டேன். "கஸ்ர காலம் இருந்தால்தான் அது உடம்பில் நிரந்தரமாகத் தங்கும். இல்லாவிட்டால் பயப்பிடத் தேவையில்லை" என்று சமய ரீதியான விளக்கம் ஒன்றைச் சொன்னார். "கஸ்ர காலமா இருக்கிறதால தானே சிறைக்குள்



கதிரேசன் காத்தவராயன்

# ஏமலாந்தியளாப் போனமோ?

ஆண்டைக்கு முருகேசர் வந்து 'உங்கை முத்தவெளியிலை வர்த்தகக் கண்காட்சிக்குப் போவம் வாவன்' எண்டார். 'ஓஓ.. வாவனப்பா போவம்..நானும் நினைச்சனான்தான்'எண்டு சேந்து போனம். வழமை மாதிரித்தான் யாழ்ப்பாண வெக்கை, சனமும் வலு கூடத்தானிருந்துது. என்ரை மோட்டச்சயிக்கிள் விட நிழல் தேடிக் கழைச்சு வெயிலுக்கை விட்டிட்டுப் போனம். 'வழமை மாதிரி திரும்பி வந்து எடுக்கேக்கைதான் காசுக்கு வருவங்கள்போலை..?' எண்டு சந்தேகங்கிளப்பினார் முருகேசர்.

'இப்ப கனக்க கனக்க சைக்கிள் பாதுகாப்புகள் அப்பிடித்தானே நடக்குது...வெயிலுக்கை அனாதையாய் விட்டிட்டுப் போக வேணும்.. திரும்பி வரேக்கைதான் அற்புதவிளக்குப் பூதங்கணக்காய் முன்னாலை வந்து குதிச்சு காசு கேப்பங்கள்...இஞ்சையும் அப்பிடித்தான்போலை' எண்டு சொல்லிக்கொண்டு போய் ரிக்கற் எடுக்கிற வரிசையிலை அதுகும் வெயில் நடுமண்டையிலை விழுகிற இடந்தான் நிண்டம்.

'என்னப்பா ஒண்டையும் தவற விடாயள்போலை...?' எண்ட குரலைக் கேட்டுத் திரும்பினால் காத்திகேசுமாஸரர். 'எங்களைத் தேடி வந்திருக்கிறாங்கள் வராட்டிக் குறையல்லே வரும்?' எண்டு சொல்ல ரண்டுபேரும்பிலத்தாச் சிரிச்சினம். அங்காலையும் ரண்டொருத்தர் சிரிச்சினம். மூண்டு பேருமாய் உள்ளை போனம். ஆளோடையாள் கதைக் கேலாத நிலை. ஒவ்வொரு காட்சியறையிலையும் ஸ்பீக்கர் செற்றுகளை வைச்சு கத்து கத்தெண்டு கத்திக்கொண்டிருந்தாங்கள். 'இந்த வெய்யில் வெக்கை சனவெக்கை காணாதெண்டு இதுகும் காதுகளைக் கொதிக்க வைக்குதுகள்' எண்டு காத்திகேசு கொதிச்சார்.

'கொட்டிலுகளை உயத்தினவங்கள் அகலமாப் போடயில்லை... சனத்துக்கை உழக்குப்படாமல் இடிபடாமல் போகவும் வேணும் ரண்டு பக்கத்தையும் பாக்கவும் வேணும்... இதுக்கொரு தனித் திறமை வேணுங் கண்டியளோ?' எண்டார் முருகேசர். 'உதுக்கை உந்த படமெடுக்கிறதுகளைப் பாருங்கோவன்... பேஸ்புக்கிலை போடுறதிலை ஒரு பெருமை... உதுகளாலைதான் நெரிசல் கூடுகுது' எண்டு நடுவிலை நிண்டு

இருக்கிறோம்" - என்றேன் நான். சிறை வாழ்க்கையில் அவர் சொன்னதுபோல அலட்சியமான பதில்களே கைதிகள் பலரிடமிருந்து வருவதை அவதானித்திருக்கிறேன். என்ன வாழ்க்கை இது என்ற வெறுப்பு வந்த பின் குளிர் என்ன கூதல் என்ன என்ற நிலைதான்.

அனுராதபுரச் சிறையில் மதியச் சாப்பாடு மிக மோசமாக இருந்தது. அரிசி அவியவில்லை. மிகவும் பழைய மீனைச் சமைத்திருந்தார்கள். எனது சிறை வாழ்க்கையில் நான் அடைக்கப்பட்டிருந்த ஏனைய 5 சிறைகளுடன் ஒப்பிடும்போது அனுராதபுரச் சிறைதான் உண்மையான சிறைச் சாப்பாடாக இருந்தது. பல கைதிகள் பகலில் சோறு சாப்பிடாமல் காலையில் எடுத்த பாணைத் தேநீருடன் சாப்பிடுவதைக் கண்டேன். அங்கிருந்த பலருக்கு மெதுவாகக் கதைக்கவும் தெரியாது. தூசனம் கலக்காமல் கதைக்கவும் மாட்டார்கள்.

2.6.2002அன்று உலகக் கிண்ணக் கால் பந்தாட்டத்தைப் பார்ப்பதற்காகக் கைதிகள் பணம் சேர்த்து அங்குள்ள கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிக்கு ஒரு அன்ரன பூஸ்ரர் வாங்கிப் பூட்டினார்கள். எனினும் ரூபவாகினி அலவரிசை வேலை செய்யவில்லை. இறுதியில் அலுமினியக் கோப்பையில் வளையம் வெட்டியெடுத்து இரண்டு வயர்களில் இரு முனைகளைத் தொடுத்தபோது காட்சியைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. உள்ளே கிடைக்கின்ற பொருள்களை வைத்துப் பல பரிசோதனைகளைக் கைதிகள் செய்து பார்ப்பார்கள்.

சிறைக்குள் ஒரு நாளைத் திட்டமிட்டுச் செயற்படுத்த முடியாத அளவுக்கு மனநிலை பாதிப்புகளும் இடையூறுகளும் இருக்கும். அனுராதபுரச் சிறையில் எனக்குத் தெரிந்த பழைய கைதிகள் ஒருவரும் இல்லை. சிறைக்குள் எங்களுக்குச் சாதகமாக எதுவும் இருக்கப்போவதில்லை. பூட்டிய மிருகத்தைப் போல அடங்கிக் கிடப்பதுதான் சிறை வாழ்க்கை.

(தொடரும்)

படமெடுத்துக்கொண்டிருந்த ஒரு பெடிக் கூட்டத்தைக் காட்டினார் மாஸ்ரர்.

'அது மட்டுமே உங்கை பாருங்கோ... அஞ்சாறு பேராய் நிண்டு கதைக்கிறதை... நடுவிலை உப்பிடி நிண்டால்.. பாருங்கோ நாலு கடையள் மறைபடுகுது' எண்டு என்ரை கண்டு பிப்பைக் காட்டினன். ஒரு பக்கத்தாலை நுழைஞ்சு தள்ளுப்பட்டதுபாதி பாத்ததுமீதியாய் மறப் பக்கத்துக்கு வந்திட்டம். 'ஒண்டைக் கவனிச்சனீங்களோ... பெற்றோல்,டீசல், கறன்ற் சாமானுகள்தான் பெருந்தொகை... உதுகளைவாங்கி பயன்படுத்துறதுக்கு எங்கடை நாட்டிலை சரிவருமோ?' எண்டு பொக்ஸ் சத்தத்துக்கு மேலாலை கேட்டார் முருகேசர்.

அதைக்கேட்ட ஒரு பெடியன் கிட்ட வாய் வந்து 'ஐயா... இது கண்காட்சி தானே? இப்பிடியிப்பிடி சாமானுகள் கிடக்கு எண்டிறதை சொல்லுறாங்கள்... பாவிக்கிறதைப்பற்றிச் சொல்லுறியள்... வாங்கலாமோ எண்டு விலையளைப் பாருங்கோ... இலங்கையிலை ரூபாய் எண்டிறாங்கள் விலையள் டொலரிலை போட்டமாதிரியல்லே கிடக்கு..' எண்டான். 'உண்மைதான் தம்பி சரியாத்தான் சொல்லுறீர்...' எண்டு பெடியனை உற்சாகப்படுத்தினார் காத்திகேசுமாஸ்ரர்.

'எங்கடை உள்ளூர் உற்பத்தியளை ஒரு பக்கமாய் ஒதுக்கமாய் விட்டிருக்கிறாங்கள்... வசதியானவங்களுக்குத்தான் வாய்ப்பு... கஸ்ரத்தைப் போக்காட்ட உழைக்கிறவையின்ரை முயற்சியளுக்குக் குடுத்த முக்கியம் காணாதுபோலை கிடக்கு' எண்டு சொல்லிக்கொண்டிருக்க அவனுக்கு ரெலிபோன் வர போட்டான். 'சின்னப் பெடியன்தான் ஆனால் நல்ல அவதானி... உப்பிடிக் கொஞ்சப் பெடியள் இருந்தால்... எவ்வளவோ நடக்கும்'எண்டு காத்திகேசுமாஸ்ரர் பெருமூச்சு விட்டார்.

'உங்கார்...நூடில்ஸ்கடை, அங்காலை பார் கோப்பி... ஒரு அப்பக்கடை... வடைக்கடை.... ஒண்டுமே கிடையாது... எப்பிடியப்பா முன்னேறுறது?' எண்டார் முருகேசர் எரிச்சலோடை.' என்னண்ணை முன்னேறுறதை விட்டிட்டு விழாமலிருக்கிறதையாவது பாக்கலாமல்லே..?...?' எண்டார் காத்திகேசுமாஸ்ரர்.

'நடக்கிறதுகள் எல்லாம் இல்லாதவனிட்டைப் பிடுங்கி உள்ளவனிட்டைக் குடுக்கிறமாதிரியல்லே கிடக்குது?' எண்டார் காத்திகேசுமாஸ்ரர். 'நாங்கள் உண்மையிலை ஏமலாந்தியளாப் போய்க் கொண்டிருக்கிறம்...இல்லையோ? நடவுங்கோ வீட்டைபோவம்' எண்டு நான் வெளிக்கிட அவையும் வெளியாலை வந்தினம்.

# மீட்டல்...

## கையேந்திமா



துன்பானந்த சுவாமி

மீட்டல் என்பது இன்பமானது. சமநேரத்தில் துன்பமுமானது. இசைமீட்டல், நினைவுமீட்டல், அமிழ்ந்ததை மீட்டல் என ஏராளமான வகையில் மீட்டல்கள் உள்ளன. எதை எப்போது எவ்வாறு எப்படி யாரால் யாருக்காக என்கிறவிதமாக மீட்டலை நிகழ்த்த முடியுமாயினும் அதற்காக நேரத்தை ஒதக்கிக்கொள்ள முடியாதவர்களாக விரைந்து கொண்டிருக்கிறோம்.

இன்றைய சூழல் நிறையவே மீட்டல்களுக்கான தேவையை உண்டாக்கியிருக்கிறது. அவ்வாறானவை இன்பமாயும் துன்பமாயும் இரண்டும் கலந்ததாயும் ஒருவிதமான உணர்வைத் தருகிறது. நாங்கள் நிற்குமிடம் எது? செல்திசையென்ன? அடையுமிடமெது? எது என்கிறவிதமாக எண்ணவைக்கிறது. எமது உணவுப்பழக்கம் என்கிற விடயத்தையே முதலில் எண்ணவேண்டிய நிலையில்தான் நாம் இருக்கிறோம். இன்றைய நடப்பு என்பதே அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வதென்கிறதைவிட வேறெதையாவது எண்ணமுடிகிறதா?

உணவென்று எண்ணும்போது கோதுமையை விடுத்து எண்ணக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை என்பது கசப்பான உண்மை. பாடைமா என்று மூத்தவர்களாலும் கூப்பன்மா என்று எமக்கு முந்தியவர்களாலும் காரணகாரியமாக பெயரிடப்பட்ட எமது மண்ணுக்கு உரித்தல்லாத தானியத்தை அரைத்தெடுத்த பண்டம் இது. முற்றும் பிறதேசத்திடம் கையேந்தியே அடைய வேண்டிய மா என்பதால் கையேந்திமா என அழைக்கலாமோ என பலமுறை எண்ணியதுண்டு. ஏற்றுக்கொண்டால் எமது தலைமுறை கையேந்திமா என அதற்குப் பெயரிட்டும்கொள்ளலாம்.

இன்று படையல் மோதகத்துக்குத் தேவையென்கிற அளவில்

# கடையில் வாங்கினால் உடனேயே உணவுப் பண்டமாக்க முடியும் என்பதை விட இன்று உணவுப்பண்டமாயே வீட்டு வாயிலில் நின்றே வாங்க முடிகிறது.

அவசிய பண்டமாக மாறிவந்திருக்கிறது. அரிசிமா, குரக்கன்மா, மரவள்ளிமா, தினைமா,பயற்றம்மா,உழுத்தம்மா,ஒடியல்மா என்று எமது மண்ணுக்கான தானியங்களையே அறிந்தும் உணவுத்தேவைக்கு முழுதுமாக நம்பியும் இருந்த எமது மூத்தவர்களுக்கு இது தீண்டாப் பண்டம். சாவு வீட்டு இறுதிஊர்வலப் பாடைக்குக் கடதாசி ஒட்டி அலங்கரிக்க மட்டுமே உதவியதால் பாடைமா என்றாகியிருந்தது. அதனால் தீண்டத்தகாப் பண்டமாய் வீட்டுக் கோடி வரையே அனுமதிக்கப்பட்டதாயும் இருந்தது.

பின்வந்த காலத்தில் பஞ்சம் தீர்ப்பதான அடையாளத்துடன் கூட்டுறவுக் கடைகளில் பங்கீட்டுஅட்டை மூலமாக (ஒருவிதமான திணிப்பாகவே) வழங்கப்பட்டது. கூப்பன்மா என்கிற பெயரைப் பெற்றுக்கொண்டது. சங்கக்கடைமா என்றும் ஒரு பெயர் அதிகபிரபலமின்றி இருந்துள்ளது. இதனது வருகை எமது மண்ணின் தானியங்களை பின்தள்ளி இன்று அவற்றை அறிந்துகொள்ளாத ஒரு தலைமுறையில் நின்றுகொண்டிருக்கிறோம்.

விரைவு உலகுக்கான அவசரங்களுக்கு ஈடுகொடுத்த காரணத்தால் நிலைகொண்டது என்பதைவிட ஆக்கிரமித்துக்கொண்டுள்ளது. எமது தானியங்களை அரிசியாக்கி மாவாக்கி எனும் வேலைப்பட்டியல் கோதுமைமாவிற்கு இல்லை. கடையில் வாங்கினால் உடனேயே உணவுப் பண்டமாக்க முடியும் எனபதை விட இன்று உணவுப்பண்டமாயே வீட்டு வாயிலில் நின்றே வாங்க முடிகிறது. இது எமது உள்நாட்டுத் தானியங்களினது கேள்வியை இல்லாமலாக்கிவிட்டது. உள்நாட்டுத் தானிய உற்பத்தி பாதிப்படைந்து இன்று இல்லையென்கிற அளவிற்கு வந்துவிட்டிருக்கிறது.



மீட்டல் என்பதை நினைவு என்பதற்கப்பால் எமக்கான தானியங்களையும் என்பதாக அமைத்தல் தேவையாக உள்ளது. இன்றுள்ள பொருளாதார நெருக்கடி நிலை என்பதற்கு மீநுகர்சிப் பண்டமாகியிருக்கும் கோதுமையினது இறக்குமதிக்காக செலுத்தும் பணமும் முக்கியமான ஒரு காரணியாகும். மனித உணவுப் பொருள் மட்டுமல்ல விலங்குணவுப் பொருட்களும்தான். பால்மாட்டுக்கான தீவனம் மட்டுமல்ல அந்தஸ்தைக் காட்டுவதற்காக வளர்க்கும் நாய்களிற்கான தீவனம்கூட இறக்குமதியினை மட்டுமே பெரிதும் நம்பியிருக்கிறது.

நாங்கள் எதை உற்பத்தி செய்கிறோம்? பிறநாட்டவனை மட்டுமே பணக்காரனாக உற்பத்தி செய்கிறோம். உணவுக்காகக் கையேந்தும் இழிநிலையை தொடக்கிவைத்த பெருமையை கோதுமைக்கு தாராளமாக வழங்கிக் கௌரவிக்கமுடியும். அதனைச் சீராகவும் விரைவாகவும் வழிப்படுத்திய பெருமை எங்களுக்கு மட்டுமேயானது. இதனை விரிவாக தொடர்கின்ற உரையாடல்களிலும் பேசிக்கொள்ள நிறையவே விடயங்கள் உண்டு.

எமது உணவுக்கான பழக்க மாற்றமென்பதானதுகூட இன்றை நம்பிக்கைகளேதுமற்ற வாழ்வுக்குக் காரணமாயிருக்கிறது. ஆரோக்கியமான எமதான வாழவும் நம்பிக்கை நிறைந்த பொருளாதாரமும் தொலைக்கப்பட்டிருக்கிறது. மிட்டல் என்பதானது உணவு என்பதிலிருந்து தொடங்கப்பட வேண்டியது என்பதை உணர முடிகிறதா? எண்ணங்கள் வழி மீட்டலைத் தொடர்வோம்.

# தாய்மை அடைவதைத் தவிர்க்கும் பெண்கள்...?

இந்திரா

மார்ச் மாதம் 8ஆம் திகதி பன்னாட்டு மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. அந்தத் தினத்தன்று பெண்களுக்குள்ள பிரச்சினைகள் பற்றியும் அதற்கான தீர்வுகள் பற்றியும் பல்வேறு கருத்துகள் வெளிக்கொணரப்பட்டன. பெண்கள் எதிர்பார்க்கும் சுதந்திரம் வேறு வேறு தளங்களில் வளர்ந்துள்ளதை அதில் காண முடிந்தது. பெண்கள் தினம் என்பதே கடமைக்குக் கொண்டாடப்படுவதாக இருக்கிறதே தவிர அந்தத் தினத்தலான பயன் ஏதும் உண்டா என்றால் அப்படி எதுவும் இல்லைத்தான். ஆனாலும் அதன் மூலம் எதையாவது சாதிக்க நினைப்பதையும் தவிர்க்க முடியாமல் கடமைக்காகக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பெண்கள் தினத்தன்று பெண்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கோசங்களில் முக்கியமானது பல பெண்கள் தாய்மை அடைவதை விரும்பாத நிலை உலகெங்கும் எழுந்திருக்கிறது என்பது. தாய்மை அடைய விருப்பமின்மை அல்லது கர்ப்ப காலம் என்பது தாங்கிக் கொள்ள முடியாத உபத்திரவம் என்று பெண்களில் குறிப்பிட்டளவானோர் எண்ணுகின்றனர் என்கிறதொரு பெரிய விமர்சனம் பெண்கள் முன்பு வைக்கப்பட்டது. அது கவனிக்கத்தக்க விமர்சனம் மாத்திரமன்றித் தீர்வு காணவேண்டியதும் கூட.

**தாங்கள் ஆண்களுக்குச் சமம் என்று நினைத்துக் கொண்டு ஆண்கள் பிள்ளை பெறுவதில்லை நாங்கள் மட்டும் ஏன் பிள்ளை பெற வேண்டும் என்று கேட்பது மிகவும் குதர்க்கமானதாகி விடும்.**

**ஆண்களுக்குப் பெண்கள் சமம்**

பெண்ணும் ஆணும் அறிவு, தொழில், செயற்பாடுகள், அரசியல் உரிமைகள் போன்ற விடயங்களில் சமம் என நினைப்பதிலும் சமப் பட்டுக் கொள்வதிலும் சமமாக இருப்பதிலும் எந்தத் தவறும் இல்லை. எல்லாப் பெண்களுக்கும் ஆண்கள் தமது தாயின் மதிப்பை வழங்க வேண்டியதும்கூட மிக மிக அவசியம். ஆனால் தாங்கள் ஆண்களுக்குச் சமம் என்று நினைத்துக் கொண்டு ஆண்கள் பிள்ளை பெறுவதில்லை நாங்கள் மட்டும் ஏன் பிள்ளை பெற வேண்டும் என்று கேட்பது மிகவும் குதர்க்கமானதாகி விடும். பிறப்பாலும் படைப்பாலும் அது பெண்களுக்குரியது. இயற்கையை மாற்றியமைப்பது வேண்டத்தகாதது.

சந்ததி உருவாக்கம், குடும்பமாக வாழ்தல், பிள்ளைகள் மீது அன்பு செலுத்துதல், அவர்களைச் சமூகத்தில் முன்னுக்குக் கொண்டுவர நினைப்பது எல்லாமே மனித வாழ்க்கையின் கட்டமைப்புகள் ஆகும். இதை இடைநிறுத்தவோ மாற்றியமைக்கவோ கூடிய வேலைகளில் ஈடுபடுதல் இயற்கைச் சூழலைப் பாதிக்கும்.



**டேட்டிங் வாழ்க்கை**

மேலை நாடுகளில் வழக்கத்திலுள்ள டேட்டிங் வாழ்க்கை என்ற முறையானது ஆணும் பெண்ணும் கூடி வாழ்ந்தாலும் திருமணம் செய்துகொள்ளவோ குழந்தை பெற்றுக்கொள்ளவோ விரும்பாத ஓர் ஏற்பாடாகும். இவ்விருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்படும்போது இருவரும் பிரிந்து செல்வது என்ற முன்னேற்பாடு இதில் உண்டு. இந்த விடயத்தில் பிரிந்து செல்வது என்பதே அதிகம் ஆதிக்கம் செலுத்துவதாக இருக்கும். எவ்வாறான சவால்கள், பிரச்சினைகள் வந்தாலும் எவ்வாறு கூடி வாழ்வது என்கிற கற்றலையும் அறிவையும் படிப்பையும் அனுபவத்தையும் பெறாமல் சவாலில்லாத வாழ்க்கைதான் வேண்டும் முரண்பாடு வந்தால் பிரிந்துசெல்வோம் என்பதை ஆரோக்கியமான வாழ்க்கை முறையாக மேலைத்தேசத்தவர் கட்டி வளர்க்கிறார்கள். அதை அந்தச்சூழலுக்கும் வாழ்



க்கை முறைக்கும் பொருந்திப்போகாத நம்மவர்களில் சிலர் தாமும் வரிந்து கட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

**ஓரினச் சேர்க்கை**

ஆணும் ஆணும் அல்லது பெண்ணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது என்ற ஏற்பாடுகள் இந்த ஓரினச் சேர்க்கை வாழ்க்கை முறையாகக் காணப்படுகின்றன. இந்த ஓரினச் சேர்க்கையாளார் கள் சேர்ந்து வாழ்வதற்கான சட்ட அங்கீகாரம் பல மேலை நாடுகளில் வழங்கப்பட்டும் உள்ளன. இந்த ஓரினச் சேர்க்கை வாழ்க்கை என்பது அடுத்த சந்ததியை உருவாக்காத இயற்கைக்கு மாறான ஒரு வாழ்க்கை முறை. இதற்குப் பழக்கப்பட்ட ஆணுக்கோ பெண்ணுக்கோ மாற்றுப் பாலினத்தவர்களைக் குடும்பமாக்கித் தமது வழக்கப்படி, சமூக கலாசார விழுமியப் படி வலுக்கட்டாமாகத் திருமணம் செய்து வைத்துப் பெற்றோர் தோற்றுப்போன சம்பவங்கள் தமிழ்ச் சமூகத்திலும் நடக்கின்றன. வெளிநாட்டிலுள்ளவரைத் திருமணம் செய்துகொண்டு இங்கிருந்து வெளிநாட்டுக்குச் செல்லும் பல பெண்களுக்கு அங்கு கணவர்கள் ஓரினச் சேர்க்கையாளர்களாக இருப்பதால் அவர்களது குடும்பங்கள் பிரிந்த சம்பவங்களும் மேலை நாடுகளில் ஓரினச் சேர்க்கைக்குப் பழக்கப்பட்ட பெண்களை இங்கிருந்து சென்று திருமணம் செய்துகொண்ட ஆண்கள் ஏமாந்துபோன சம்பவங்களும் நடந்துள்ளன.

**பிந்திய திருமணங்களால், குழந்தையின்மை அல்லது ஓரிரு குழந்தைகள் பிறப்பது. அதுவும்கூடப் பெரும்பாலும் உடற்குறைபாடு அல்லது நோய்களுடன் கிடைப்பது என நிலமை மோசமடைந்து செல்கிறது.**

**வாடகைத் தாய் முறை**

தென்னிந்தியத் திரைப்பட நடிகை நயன்தாரா கடந்த வருடம் வாடகைத் தாய் ஒருவரை வைத்து இரண்டு குழந்தைகளைப் பெற்றார். இது கூடப் பல பெண்களை உற்சாகப்படுத்தியிருக்கிறது. தாங்களும் பிரசவ காலம் பிரசவ வலி என இல்லாது பிள்ளை பெற முடியும் என நினைப்பது தெரிகிறது. தமிழ்ப் பெண்களில் பலர் 30வயதைக் கடந்தும் சீதனம், பொருத்தம் எனப் பல்வேறு காரணங்களைக் காட்டித் திருமணம் செய்யாமல் இருக்கும் போக்கு அதிகரித்துள்ளது. இதனால், அவர்களின் குழந்தைப்பேறு குறைந்து செல்கிறது. பிந்திய திருமணங்களால், குழந்தையின்மை அல்லது ஓரிரு குழந்தைகள் பிறப்பது. அதுவும்கூடப் பெரும்பாலும் உடற்குறைபாடு அல்லது நோய்களுடன் கிடைப்பது என நிலமை மோசமடைந்து செல்கிறது. ஆனால், மறுபுறத்தில் ஓரினச்சேர்க்கை, குழந்தைப்பேறு வேண்டாம் எனப் பெண்களில் சிலர் தாய்மை அடைவதைத் தவிர்த்துக்கொள்ள நினைக்கிறார்கள். இது மாற்றப்படாவிட்டால் பாரிய பின்விளைவுகளை சமூகத்தில் ஏற்படும். இவற்றைத் தடுப்பதற்கு பெரியளவில் சமூக விழிப்புணர்வுகளைச் செய்யவேண்டும். பெண் விடுதலை, பெண் சுதந்திரம், ஆண் ஆதிக்கம் என்கிற ஏதாவதொரு போர்வைக்குள் இதை முடக்கித் திசை திருப்பிவிடக்கூடாது.






# பார்க்க வேண்டிய சினிமா

சினிமா

கடுமையாக மதத்தைக் (இந்து) கடைப்பிடிக்கும் குடும்பத் தலைவர் பல்ராம். ஆணாதிக்க மனோபாவம் கொண்டவர். அவர் தனது மனைவி, மகள், மகனுடன் குடும்பமாக இந்தியாவின் ராமேஸ்வரத்திற்குப் புனித யாத்திரை செய்கிறார். அந்தப் பயணத்தின் இடையில் விபத்து ஒன்று ஏற்படுகிறது. பரிச்சயமில்லாத, மொழி தெரியாத ஊரில் சிக்கிக் கொள்கின்றனர். அந்த விபத்தில் பால்ராமின் குடும்பத்தில் ஒருவர் இறக்கிறார். அந்தச் சடலத்துடன் தங்கள் சொந்த ஊரான அயோத்திக்கு அவர்கள் திரும்பிச்சென்றது எப்படி? அவர்களுக்கு உதவியது யார்? அதில் ஏற்பட்ட சிக்கல்கள் என்ன? என்பவற்றின் கோர்வை தான் படத்தின் மீதிக்கதை.

இதை இயக்கியிருக்கிறார் மந்திரமூர்த்தி. குறைவான கதாபாத்திரங்களைக் கொண்டு படத்தை ஒப்பேற்றியுள்ளார். ஒரு பாடலுடன் அயோத்தி மண்ணில் தொடங்கும் படம் தமிழகத்தில் நுழைந்து வேகமெடுக்கிறது. பால்ராமின் ஆதிக்க மனப்பான்மையால் பாதிக்கப்படும் குடும்பம், தமிழர்கள் மீதான அவரது பார்வை, எதிர்பாரா விபத்து என நீளும் படத்தின் முதல் பாதி கதையின் நோக்கம் தொடர்பான கேள்விகளை எழுப்பினாலும் பெரிய அளவில் தொய்வில்லாமல் நகர்கிறது.

இந்தியாவின் இருவேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் 'மனிதம்' என்ற ஒற்றைப் புள்ளியில் இணையும் இடம், மொழி என்பது வெறும் தொடர்பியல் ஊடகம் தான் என்பதை விளக்கி, மொழிகள் புரியாவிட்டாலும் உணர்வுகள் எல்லோருக்கும் பொதுவானவை என்பதை படம் முழுதும் கடத்தியிருக்கிற விதம் ஈர்க்கிறது.

**பாத்திரங்கள்**

பதற்றத்துடன் அங்குமிங்கும் பரபரப்பாக ஓடிக் கொண்டிருக்கும் சசிகுமார், உதவச் சென்று சிக்கலில் மாட்டி கொள்வது, இறுதிவரை பாதிக்கப்பட்டவர்களுக்காக நிற்பது எனத் தனது வழக்கமான நடிப்பில் இறங்கியிருக்கிறார். ஆனால், அவர் கதாநாயகன் என்பதைவிட பால்ராம் கதா பாத்திரமே படத்தின் நாயகனாக மனதில் மிளிர்கிறது. சில காட்சிகளில் யதார்த்தம் விலகியிருப்பதாலும், சில இடங்



களில் நாயகத்தனத்தின் மிகையாலும் படத்துடன் முழுதாக ஒன்ற முடியவில்லை.

அறிமுக நடிகையான ப்ரீத்தி அஸ்ரா ணிக்கு பெரும்பாலும் குடும்பப உணர்வுக் காட்சிகளில் நடிக்க வேண்டிய தேவை. அதைத் திறம்படக் கையாண்டு, தேவை யான உணர்ச்சிகளை அதே அழுத்ததுடன் கூடிய மீட்டரில் கடத்தும் விதத்தால் தேர்ந்த நடிகரின் சாயலைப் பிரதிபலிக்கி றார்.

நெடுகிலும் பான்பராக்கை மென்று கொண்டு ஆதிக்கம் செலுத்திக்கொண்டு, ஒட்டுமொத்த பார்வையாளர்களின் கோபத்தையும் பெற்றுத் தனது யதார்த்த மான நடிப்பில் முத்திரை பதிக்கிறார் யஷ் பால் ஷர்மா. சிடுமுஞ்சியுடன் இருக்கும் அவர் உடைந்து அழும் காட்சி ஒன்றில் தேர்ச்சியான நடிப்பை வெளிப்படுத்துகி றார். அஞ்சு அஸ்ராணி, சிறுவன் அத் வைத் கதாபாத்திரத்திற்கு தேவையான நடிப்பை கொடுக்கின்றனர். புகழ் காமெ டிக்கு முயற்சிக்காமல் கதையோட்டத்தோடு பயணிக்கிறார்.

**இசை, ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு**

என்.ஆர்.ரகுநந்தனின் பின்னணி இசை தேவையான உணர்ச்சிகளை கடத்த உத வியிருக்கிறது. பாடல்கள் ரசிக்க வைத்தா லும், 'திருட்டு பயல' பாடல் கதைக்குத் தேவையில்லாததாகவே தெரிகிறது. இறுதி யில் வரும் பாடல்களும் வரிகளும் கதைக்குப் பலம் சேர்க்கின்றன. மாதேஷ் மாணிக்கத்தின் ஒளிப்பதிவு காட்சிகளை ரசிக்க வைக்கிறது. தர்க்கப் பிழைகளையும், சில பல குறைகளையும் தாண்டித் தற்கால வரவுகளில் பார்க்கத்தக்க சினிமாவாக மிளிர்கிறது மந்திரமூர்த்தியின் இந்த அயோத்தி.

## இந்த வாரச் சொல்

# அண்டு, அண்டுதல்

இந்தச் சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் வினைச் சொல்லாகப் பேசப்படுகிறது. பொருள்களை ஒன்றோ டொன்று சேர்த்து வைத்திருப்பது, மிக நெருக்கி வைத் திருப்பது ஆகிய அர்த்தங்களில் பல்வேறு சந்தர்ப் பங்களில் பயன்படுத்தப்படுகிறது. உறவாடுதல், நட்புப் பேணுதல் ஆகிய அர்த்தங்களிலும் பேசப்படுகிறது. அதைவிட ஒருவரைப் பற்றி மற்றவருக்குப் புறம் சொல் வதான ஒரு வகை அர்த்தத்திலும் பேசப்படுவதாய் வழக்கிலுள்ளது.

"கருக்கு மட்டைகளை இறுக்கி அண்டிப் பிடி அப்ப தான் சறுக்காமலுக்கு வடிவாய்க் கட்டலாம்"

"கல்லுகளைப் நல்லாய் சுவரோட அண்டுற மாதிரி வை. அப்பதான் பாம்பு பூச்சி உள்ளிடாது"

(இவற்றில் பொருளை நெருக்கி வைத்தல் அல்லது ஒன்றோடொன்று சேர்த்து வைத்தல் ஆகிய அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது)

"உவனை அண்டி வைச்சிருக்கேக்க எனக்குத் தெரி யும் ஏதாவது கெட்டது செய்வாணெண்டு"

"அதுகளோரு அண்டிப் பிழைக்கிற சாதி"

"இப்ப கனபேர் ஒரு தொழிலும் செய்து உழைக்காது மற்றவர்களை அண்டிப் பிழைப்பதில் குறியாக இருக்கினம்"

"அதுகளோட ஒரு அண்டலும் வைச்சிருக்கக்கூடாது"

(இவற்றில் உறவாடுதல் நட்புப் பேணுதல் ஆகிய அர்த்தங்கள் உள்ளன)

ஒருவரைப் பற்றி மற்றவர்களுக்குப் புறம் சொல்வ தாகவும் இது அமைகிறது.

"அவன்தான் அதுகளைப் பற்றி அண்டி வைச்சிருக் கிறான்"

"அவனொரு அண்டல் காரன் என்டு உனக்குத் தெரி யாதா?"

"என்னோட இருந்துபோட்டு அங்கால போய் அண்டி வைச்சிட்டாங்கள்"

"நான் அவரைப் பற்றிச் சொன்னதை அவரிடமோ போய் அண்டி வைச்சிட்டான்"

# தண்ணீரில் ஆரம்பித்த சண்டை தண்ணீரிலேயே முடிந்தது

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

ஷாஜன் மேஜர் பியரத்ன காலி - அல் பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 2005ஆம் ஆண்டில் இலங்கைப் படையின் சிறப்புப் படைப்பிரிவின் (ஸ்பெசல் போர்ஸ்) சேர்ந்து ஒரு வருடப் பயிற்சி பெற்றுப் பின்னர் களத்தில் இறக்கப் பட்டார். சண்டையும் பயிற்சியும் என்று செயற்பட்ட இவர் புலிகளுடனான பல சண்டைகளுக்கு முகம் கொடுத்தவர். படையில் இவரது பணியாகக் கிளைமோர் வைக்கும் பணி இருந்தது. தனது தாக்குதல் ஒன்றில் புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான காலரசன் உட்பட மூவர் கொல்லப்பட்டனர் என்கிறார் இவர். இவர் தனது அனுபவங்களை வனச யூரியூப் தளத்தில் கீழ்வருமாறு பகிர்ந்தார்.



நான் 2005ஆம் ஆண்டு இலங்கைப் படையணியின் சிறப்புப் படைப்பிரிவில் சேர்ந்து பயிற்சி பெற்றுக் களத்தில் இறக்கப்பட்டேன். மாவிலாற்றைப் புலிகள் பூட்டிய பின்னர் அதைத் திறக்கும் முயற்சியில் எமது படைப் பிரிவு களமிறங்கியது. இந்தச் சண்டை புலிகள் பூட்டிய மாவிலாற்றைத் திறப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. தண்ணீருக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் தண்ணீருக்குள் முடிவடைந்ததது. தண்ணீர் மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது என்பதைப் புலிகள் மதிக்காது நடந்துகொண்டதால் தான் அவர்கள் தண்ணீருக்குள் அழிய வேண்டிய நிலை ஏற்பட்டடது.

சிறப்புப் படைப்பிரிவில் உள்ளவர்களுக்குச் சகல ஆயுதங்களையும் கையாளும் பயிற்சி அளிக்கப்பட்டது. நான் ஜி.பி.எம்.ஜி என்ற பெரிய ஆயுதத்தைக் கையாள்வதில் மிகவும் விருப்பத்துடன் இருந்தேன். அந்த ஆயுதம் கையில் இருந்தால் 100பேர் எதிர்த்து நின்றாலும் பயமின்றித் தாக்க முடியும். அதை எனது அனுபவத்தில் கண்டுமிருக்கிறேன். பாவித்தும் இருக்கிறேன்.

**அம்மாவிடம் போறேன் என்று சொன்னேன்**

நான் வட பகுதிப் போர் முனைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து புறப்படும்போது அம்மாவிடம் போயிற்று வாறேன் என்று கூறுவதில்லை. மதவாச்சிக்குத் தென்புறமாக எங்கு கடமையில் நின்றாலும் பயப்பிடவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் வட முனையில் புலிகளுடன் மோதப்போகும்போது உயிருடன் திரும்பலாம் என்ற நம்பிக்கை இருப்பதில்லை. பெரும்பாலும் எனது சடலம் வீட்டுக்கு அனுப்பப்படும் அல்லது அதைக்கூட எடுக்க முடியாமல் போகலாம் என்ற மனநிலையே எமக்கு இருந்தது.

புலிகளின் பகுதிக்குள் அவர்களைத் தேடி இறங்கும்போது புலிகளில் குறைந்தது பத்துப் பேரையாவது கொல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு இருந்தது. அதற்காக 50கிலோவுக்கு மேற்பட்ட கிளைமோர்கள், ஆயுதங்கள், கைக்குண்டுகள் எனக் காவிச் செல்வேன். சாப்பாடு தண்ணீர் போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்துவதில்லை. பெரும்பாலும் 6பேர் கொண்ட அணியே எமது சாலிப் பிரிவில் களமிறக்கப்பட்டது.






இந்த வார சமையல்

# புளிக்கஞ்சி

நோய் வாய்ப்பட்டிருக்கிறபோது நாவில் ருசி தங்காது என்பர். அவ்வேளைகளில் உகந்த உணவு புளிக்கஞ்சி. எதைச் சாப்பிட்டாலும் பச்சைத்தண்ணியாய் இருக்குது" என்போருக்கு இந்தப் புளிக்கஞ்சி பிடித்துப்போகும் உணவாக இருக்கும். அந்த வகையில் இம்முறை புளிக்கஞ்சியை எவ்வாறு செய்வது என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

புழுங்கல் அரிசி கால் கிலோ.
புளி - 100 கிராம்.
செத்தல் மிளகாய்கள் - 5 அல்லது 8
மல்லி - ஒரு மேசைக்கரண்டி
மஞ்சள் - அரைத் தேக்கரண்டி
உள்ளி - 5 பற்கள்
மிளகு - ஒரு தேக்கரண்டி
சீரகம் - ஒரு மேசைக்கரண்டி



**எப்படிச் சமைப்பது...?**



புழுங்கலரிசியைப் பானையில் வேக வையுங்கள். அரிசி வெந்ததும் செத்தல் மிளகாய், மல்லி, மஞ்சள் ஆகியவற்றைச் சொர சொரப்பாக அரைத்துச் சேருங்கள். பின்னர் உள்ளி, மிளகு, சீரகம் சேர்த்துச் சொர சொரப்பாக இடித்து அரைத்து அந்தக் கூட்டையும் கஞ்சியிற் போடுங்கள். பின்னர் பழப்புளியும் உப்பும் கரைத்து விடுங்கள். எல்லாம் கொதித்ததும் துழாவி விடுங்கள். நன்றாக வேகவிட்டு இறக்கிக் கொள்ளுங்கள். ருசியான புளிக்கஞ்சியைச் சூடாகப் பருகுங்கள்.

5நாள்களில் திரும்புப் பயணமாக இருந்தால் மேலும் 2 நாள் தங்கித் தாக்குதல்களை நடத்திவிட்டுத் தான் திரும்புவேன். 7 நாள்கள் பயணம் எனத் திட்டமிட்டால் குறைந்தது 10 நாள்கள் பல கிலோ மீற்றர்கள் தூரம் சென்று காத்திருந்து தாக்குவேன். தூக்கிச் செல்லும் கிளைமோர்க் குண்டுகளைப் பொருத்தமான இடத்தில் பொருத்தமான தருணத்தில் பொருத்துவேன். கிளைமோரைப் பொருத்தும் விடயத்தில் வேறு யாரையும் நான் நம்புவதில்லை. மிகவும் கஸ்ரப்பட்டுத் தேடிய வாய்ப்பை இழந்து விடக்கூடாது என்பதில் குறியாக இருந்ததால் கிளைமோர்களைப் பிழையின்றி நானே பொருத்துவேன். அதுவும் எனது தாக்குதல்களின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும்.

**புலிகளின் படை வியூகம்**

புலிகள் தமது நிலைகளை டான வடிவில் அமைத்திருப்பார்கள். அந்த பங்கர்களில் எந்த இடத்தில் கிளைமோரைப் பொருத்துவது என்பதை எனது வேவுத் தேடல் மூலம் அறிந்தேன். வேறு யாரும் வேவு பார்த்துச் சொல்லும் தகவல்களைக் கூட நான் நேரில் சென்று பார்த்தபின்னரே உறுதிப்படுத்திக் கொள்வேன்.

மாவிலாற்றுப் பகுதியில் புலிகளின் முக்கிய பதுங்குகுழி ஒன்றை அவதானித்து அவர்கள் அங்கில்லாத நேரத்தில் 12கிலோ கிளைமோரைப் பொருத்திவிட்டு அந்த பங்கருக்குள்ளேயே காத்திருந்தேன். அவர்கள் பங்கரை நோக்கி வரும்போது 17பேர் வரை வந்தார்கள். நான் அவர்களை எண்ணிக்கொண்டிருந்தேன். குறைந்தது 50பேர் அந்த இடத்துக்கு வந்துசேரும் வரை காத்திருந்தேன். அதன்படி 50 புலிகளை ஒரு கிளைமோரில் கொல்லத் திட்டமிட்டேன். அப்போது அங்கு வந்த 17 பேரில் ஒருவன் நான் பதுங்கிக் காத்திருந்த பங்கருக்குள் இறங்க முற்பட்டுத் தனது ஒரு காலை வைத்தான். அப்போது கிளைமோரை வெடிக்க வைத்தேன். அங்கு நின்ற அனைவரும் இறந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த ஆயுதங்களையோ, அவர்களின் சடலங்களையோ எடுக்க முடியாதவாறு அவை சிதைந்துபோய்க் கிடந்தன. மிக வேகமாக அந்த இடத்தைவிட்டு வெளியேறினேன்.

(தொடரும்)

# ஏன்...?

நட்சத்திரா

# அப்டி...?

46



## மச்சான் நல்ல 'ரிப் ரொப்பாய்...' வெளிக்கிட்டிட்டார்...!

கிராமத்திலுள்ள நபர் ஒருவர் பட்டனம் போவதற்காகவோ, விழாவுக்குச் செல்வதற்காகவோ, அல்லது ஏதாவது கொண்டாட்ட வீட்டுக்குச் செல்வதற்காகவோ ஆயத்தமாகி அதற்காக நீளக் காற்சட்டை சேர்ட் அணிந்து சப்பாத்துப்போட்டு ஒழுங்காகத் தலை வாரி முகச் சவரம் செய்து புறப்பட்டுச் செல்வாரானால்.... அவரைக் காண்போர் எல்லாம், "அவன் இண்டைக்கு நல்ல ரிப் ரொப்பா வெளிக்கிட்டுப் போறான்" என்று கூறுவதை வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். கிராமத்தில் பொதுவாகக் காணப்படும் பேச்சாடலாக இது இருக்கும். கிராமங்களில் மாத்திரமன்றி நகர்ப்புறத்தவர்களும் இவ்வாறு பேசத் தவறுவதில்லை. நல்ல விதமாக ஆடையணிந்து அலங்காரம் செய்து வெளியே செல்ல ஆயத்தமாவோரை "என்ன இண்டைக்கு நல்ல ரிப் ரொப்பா வெளிக்கிட்டுப் போறார்" என்று வினாவுவதே வழக்கம். ஏன் இப்படிச் சொல்கின்றனர். இந்த ரிப் ரொப் என்றால் என்ன...? இதன் மூலம் குறிக்கப்படுவது என்ன?

ரிப் ரொப் என்பதானது மேற்கண்டவாறு நல்ல விதமாக ஆயத்தமாகி வெளிக்கிட்டுச் செல்லுதல் என்கிற ஒரு பேச்சு வழக்கல்ல. ஆனால் ரிப் ரொப் என்றால் அவ்வாறு நல்ல விதமாக ஆயத்தமாகிச் செல்லுதல் என்று ஒரு பொதுவான புரிதல் தான் பரவலாக உண்டு. அதன் அர்த்தம் பலருக்குத் தெரிவதில்லை. ரிப் ரொப் என்பது ஓர் ஆங்கிலச் சொல். ரிப் என்பது அடி. அது கால் பெருவிரல் நுணியைக் குறிக்கும். ரொப் என்பது உச்சி. அது உச்சந்தலையைக் குறிக்கும். உள்ளங் காலில் இருந்து உச்சந் தலை வரை என்று அர்த்தப்படும். சுருங்கச் சொன்னால் ரிப் ரொப் என்பது உச்சி முதல் பாதம் வரையான உடலின் எல்லாப் பாகங்களும் என அர்த்தப்படும். அவற்றை நேர்த்தியாகவும் வசீகரமாகவும் வைத்திருப்பதையும் பேணுவதையுமே நம்மவர்கள் ரிப் ரொப் என்று மாற்றியிருக்கிறார்கள்....!

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.03.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781